# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (ஐப்பசி–கார்த்திகை) நவம்பர் 2012 ஏர்-01, உழவு-05, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்பிரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.
செல் : 93815 45452

அச்சகம் :
மரியம் இப்ராஹிம்
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டட நிதி | - | 3 |
| வேண்டுகோள் | – | 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – | 5 |
| வாழ்த்துக்கள் | – | 6 |
| வாழ்த்துகிறோம் | - | 8 |
| நன்றி | - | 9 |
| என்றும் நலமுடன் வாழ | - | 10 |
| சந்தனம் | - | 12 |
| கொங்கு சாதனையாளர் | - | 19 |
| மணமகள் தேவை | - | 27 |
| மணமகன் தேவை | - | 28 |
| மணமகள் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,

வணக்கம், கொங்கு நண்பர்கள் சங்கம் 50 ஆண்டுகளைக் கடந்து பலரும் பாராட்டும் வண்ணம் சமுதாயப் பணியாற்றி வருகின்றது. சங்கம் துவக்கப்பட்டதன் நோக்கங்களில் மிக முக்கியமானது சென்னையில் வசிக்கும் கொங்குச் சொந்தங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டு பழகவும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவும், சோகத்தில் இருப்போருக்கு ஆறுதல் கூறி, தேவையான உதவிகளைப் புரிவதற்கும் என்பதை அனைவரும் அறிவோம்.



கடந்த இரண்டு ஆண்டுகளாக, என்னுடைய தலைமையிலான செயற்குழு மிகவும் சிறப்பாகவும், பொறுப்பாகவும் செயல்பட்டு சங்க வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் பல்வேறு பணிகளை ஆற்றி பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது. தீரன் சின்னமலை மாளிகையை அனைவரும் வியந்து போற்று மளவுக்கு நவீன வசதிகளுடனும், அனைத்து அறைகளுக்கும் குளிர்சாதன வசதியுடனும் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டது, கடன் ஏதும் வாங்காமலேயே பலகோடி ரூபாய் மதிப்பில் இம்மாளிகையை கட்டி முடித்தது, கொங்கு நாடு இல்லம் மற்றும் வெள்ளி விழா இல்லம் ஆகிய இரண்டையும் சிறப்பாகப் பராமரித்து புதிய இணையதளம் (Website) தொடங்கப்பட்டு, செய்திகளை அருமையாகவும், பலரும் படித்து பயன்பெற்றிடவும் வெளியிட்டு வருவது, கொங்கு நண்பர்கள் இதழுக்கு மத்திய அரசின் அனுமதியைப்போராடிப் பெற்றது, 50 ஆண்டுகால சங்க வரலாற்று நூலை எழுதச் செய்து வெளியிட்டது, பொன்விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது, கிராமப்புற மாணவர்களுக்கு IAS பயிற்சிக்குத் திட்டமிட்டது முதலானவை இச்செயற்குழுவின் சாதனைகளில் சிலவாகும்.

இத்தகைய சாதனைகள் புரியவும், சங்க வளர்ச்சிக்கும் இரண்டு ஆண்டுகளாக அரும்பணியாற்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன். தீரன் சின்னமலை மாளிகை கட்ட வட்டியில்லாக்கடன் கொடுத்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி. 2012–2014 ஆம்ஆண்டிற்கான புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க 25–11–2012 அன்று நடைபெற இருக்கும் தேர்தலில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டு புதிய நிர்வாகக்குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நவீன வசதிகளுடன் புதியதாகக் கட்டப்பட்டுள்ள தீரன்சின்னமலை மாளிகை சென்னைக்கு வரும் கொங்குச் சொந்தங்களுக்கும், சென்னையில் குடியிருக்கும் சொந்தங்களின் வெளியூர் நண்பர்கள், உறவினர்கள் தங்குவதற்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல. குறைந்த கட்டணம், சொகுசான வசதிகள், சென்னையின் மையப்பகுதியில் அமைந்துள்ளமை, சிறந்த பாதுகாப்பு போன்ற சிறப்பம்சங்கள் கொண்ட இம்மாளிகையின் அறைகளில் தங்கிப் பயன்பெற்றிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மின்வெட்டால் விவசாயிகள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். பயிர்கள் வாடுவதோடு, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பத்தில் பெரிதும் வாடுகின்றனர். உயிர் வாழ்வதே கேள்விக்குறியாகிவிட்டது. வெளி மாநிலங்களிலிருந்தும், மத்திய தொகுப்பிலிருந்தும் கூடுதல் மின்சாரம் பெற்று, அல்லலுறும் விவசாயிகளின் துயரம் போக்கிட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டி சங்கத்தின் சார்பில் தாழ்மையுடனும், பணிவன்புடனும் தமிழக அரசைக் கேட்டுக்கெள்கிறேன். அனைவருக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துகள்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 72,78,037 |
| 1727 | 2097 | R.செல்லமுத்து | 1000 |
| 1728 | | ஜெய்சூர்யா G.H. | 1000 |
| 1729 | | S.சாந்தி L.H. | 1000 |
| 1730 | | V.சங்கீதா L.H. | 1000 |
| 1731 | | M.சரண்யா L.H. | 1000 |
| 1732 | 2552 | N.சந்திரவேலு | 1000 |
| 1733 | 3219 | K.சுபாஷ் | 1000 |
| 1734 | | M.சோபனா L.H. | 1000 |
| 1735 | 1408 | M.ஞானசேகரன் | 1000 |
| 1736 | 2817 | K.சிவகுமார் | 1000 |
| 1737 | 2448 | S.முத்துசாமி | 1000 |
| 1738 | | K.மனோஜ்குமார் | 1000 |
| 1739 | 1175 | N.ஈஸ்வரமூர்த்தி | 1000 |
| 1740 | | S.சந்தியா L.H. | 1000 |
| 1741 | | S.செந்தளிர் L.H. | 1000 |
| 1742 | 945 | P.தங்கவேல் | 2000 |
| 1743 | 2120 | B.S.சதாசிவம் | 1000 |
| 1744 | | மோனிகா L.H. | 1000 |
| 1745 | 112 | K.பழனியப்பன் | 1000 |
| 1746 | 1826 | C.செல்வராஜ் | 1000 |
| 1747 | | S.கதிர்வேல் | 1000 |
| 1748 | 2432 | P.ஆனந்தன் | 1000 |
| 1749 | 3596 | N.சண்முகம் | 1500 |
| 1750 | | S.விவேகா L.H. | 1000 |
| 1751 | 617 | P.ராஜீ | 1000 |
| | | மொத்தம் | 73,04,537 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்து, செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதுவரை விண்ணப்பித்த உறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே விண்ணப்பித்து யாருக்கேனும் அடையாள அட்டை இதுவரை கிடைக்கவில்லையென்றால், சங்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்துவரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்பட்டுவரும் அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். ‘கொங்கு நண்பர்கள் இதழ்’ இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்குச் சொந்தங்கள் இதைப் படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க
விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# 02-09-2012 அன்று நடைபெற்ற சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொன்விழாவிற்கு சான்றோர்களின் வாழ்த்துகள்

**திரு.பரணி பாலு அவர்களுக்கு**

கொங்கு நண்பர்கள் சங்கம் நடத்தும் 50 வது ஆண்டு நிறைவு குடும்ப விழா 02–09–2012 ஞாயிற்றுக்கிழமை காமராஜர் அரங்கத்தில் நடைபெற இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

சிறந்த சாதனையாளர்களுக்கு பதக்கம், பணமுடிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கி, அவர்களின் பெருமையைப் போற்றி வாழ்த்த இருப்பதற்கும், அவர்கள் மென்மேலும் இத்தகைய சாதனைகள் பல புரிந்து சமூகத்திற்கு மட்டுமல்ல நாடே பெருமைப்படும் அளவுக்கு உயர்வு பெற்று, நல்ல பல அறக் காரியங்கள் ஆற்ற வேண்டும் என்று மனங்கனிந்து பாராட்டுகிறேன்.

முழுமையான அர்ப்பணிப்பும், சிதறாத கவனமும் கொண்டு சாதனை மனிதர்களாக கொங்குச் சமுதாய மக்கள் மிகப் பெரும் வளர்ச்சி அடைந்திருப்பதற்கு முதலில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயம் பெருமைப்படும் அளவில் பல சாதனைகளைப் படைத்து சமுதாய முன்னேற்றத்திற்கு உன்னதமாய்ப் பணியாற்றியமைக்காக விருது வழங்கி கௌரவிக்க இருப்பது என்பது அவர்களுடைய சிறப்பை, வளர்ச்சியை, சமுதாய நலனுக்காக அவர்களது பங்களிப்பை நினைவுபடுத்துவதாகவே அமையும்.

இவ்வினிய நிகழ்ச்சியில் பங்குகொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள். 02–09–2012 அன்று மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்கனவே இசைவு தெரிவித்திருப்பதால் தங்களின் வேண்டுகோளை ஏற்க இயலவில்லை.

விழா மிகச் சிறப்புடன் நடைபெற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளை நினைந்து வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
**நா.மகாலிங்கம்**
தலைவர், சக்தி குழுமம்

**திரு.பரணி பாலு அவர்களுக்கு**

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொன்விழா 50–வது ஆண்டு நிறைவு குடும்பவிழா அழைப்பிதழ் கிடைத்தது. மிகவும் நன்றி.

கொங்கு நண்பர்கள் சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக சிறப்பான முறையில் பணியாற்றி வருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மென்மேலும் சங்கத்தின் பணி சிறந்திடவும், விழா வெற்றிகரமாக நடைபெறவும் எனது இதயமார்ந்த நல்வாழ்த்துகள்

இங்ஙனம்
**மு.கண்ணப்பன்**
முன்னாள் அமைச்சர்

Dear Mr. Barani Balu Avl.

Vanakkam.

Please accept my heartiest congratulations for the success of 50th year celebration of our Chennai Kongu Nanbargal Sangam under your able Leadership. Certainly this function will send a good message to our Community to further work hard and achieve in all fields.

We proved that we are not one among all, but we are number one in all aspects.

Please convey my best wishes and greetings to all the office bearers of our Sangam for their sincere efforts to make this function as a grand success.

Yours
**S.K.Karventhen**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும்
பிற்படுத்தப்பட்டோர் தேசிய ஆணைய உறுப்பினர்

## வாழ்த்துகிறோம்

**டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்களுக்கு ம.பொ.சி.விருது**

அமெரிக்காவில் சிறந்த பொருளாதாரப் பேராசிரியராக 20 ஆண்டுகள் விளங்கியவர், சிறந்த தொழிலதிபர், கல்வியாளர், சென்னை லி ராயல் மெரிடியன், கோவை லி மெரிடியன் ஆகிய இரண்டு புகழ்பெற்ற ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை உருவாக்கி, சுற்றுலா மற்றும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிவருபவர், நாமக்கல் மாவட்டம் முத்துகாபட்டி என்ற சிற்றூரில் பிறந்து வியத்தகு சாதனைகள் புரிந்தவர், 'கொங்கு மாமணி' உட்பட பல விருதுகளைப்பெற்றுள்ள பெருமைக்குரியவர், முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர்.அவர்கள் அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்ததோடு அவருடைய பேரன்புக்குப் பாத்திரமாக விளங்கியவர் – இத்தனை சிறப்புகளைப் பெற்றுள்ளவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்கள்.



03–10–2012 அன்று சென்னை சவேரா ஹோட்டலில் நடைபெற்ற ம.பொ.சி.அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் விழாவில் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்கள் ஆற்றியுள்ள அரும்பெரும் சாதனைகளுக்காக ம.பொ.சி.விருது வழங்கப்பட்டது. ம.பொ.சி.அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்ட இந்த விருதை நீதியரசர் எஸ்.மோகன் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். நீதியரசர் பி.ஜோதிமணி, திரு. பி.எஸ்.ஞானதேசிகன் எம்.பி., திரு.கு.செல்வப்பெருந்தகை, திரு.பா.செந்தில்குமார், சூர்யா சந்திரானந்தா, திருமதி பாரதி பாஸ்கரன் முதலானோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

தமிழகத்திற்காகவும், தமிழுக்காகவும் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட சிலம்புச்செல்வர் அவர்கள் பெயரால் வழங்கப்பட்ட ம.பொ.சி.விருதைப் பெற்று கொங்கு நாட்டிற்குப் பெரும் பெருமை சேர்த்துள்ள டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி மகிழ்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மூங்கிலேரி கிராமத்தைச் சேர்ந்தவரும், நமது சங்கத்தின் உறுப்பினருமான திரு. டி.நடராஜன் M.E., அவர்கள் B.S.N.L., நிறுவனத்தில் மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருபவர் என்பதோடு, சிறப்பான பணிக்காக பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றவர்.



கொச்சியில் பணிபுரிந்து வந்த இவர், தற்போது B.S.N.L., நிறுவனத்தில் (Chief General Manager) தலைமைப் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்று சென்னையில் பணியில் சேர்ந்துள்ளார்.

பதவி உயர்வு பெற்றுள்ள திரு. டி.நடராஜன் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# நன்றி

ஈரோடு மாவட்டம் குட்டபாளையம் ஊரைச்சேர்ந்தவர், திரு. அரவிந்தன் அவர்கள். இவர் K Labs Technology & Solution Pvt. Ltd. என்ற நிறுவனத்தை சிறப்பாக நடத்தி வருகிறார்.

சமுதாய உணர்வும், சேவை மனப்பான்மையும் கொண்ட திரு. அரவிந்தன் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் www.kongunanbargalsangam.com என்ற இணைய தளத்தை (Website) உருவாக்கி சங்கச் செய்திகளை மிகச்சிறப்புடன் வெளியிட்டு வருகிறார். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும், கொங்குச் சொந்தங்கள் சங்கச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள இது அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. சிந்தனையைத் தூண்டும் தலையங்கம், சான்றோர் கட்டுரைகள், திருமணத் தகவல் செய்திகள், சொந்தங்களின் சாதனைகளைப் பாராட்டும் வாழ்த்துச் செய்திகள், இரங்கல் செய்திகள், சங்கத்தின் நிகழ்வுகள் பற்றிய செய்திகள் போன்றவற்றைத் தாங்கி அனைவரும் விரும்பிப் படிப்பதோடு, பயன்பெறவும் ஏதுவாக உள்ள கொங்கு நண்பர்கள் இதழ் ஒவ்வொரு மாதமும் முழுமையாக இந்த இணையதளத்தின் மூலமாக படிப்பதோடு, செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள உலகெங்கிலும் வசித்துவரும் நம் சமுதாய மக்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல. 02–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற சங்கத்தின் 50 ஆண்டு நிறைவு பொன்விழா நிகழ்ச்சிகளை இணையதளத்தில் மிகச்சிறப்பாக நேரடியாக ஒளிபரப்பு செய்தார் என்பது குறிப்பிதக்கது.

இத்தகைய சிறப்பான சேவையாற்றி வருகின்ற திரு. அரவிந்த் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறது.

❖❖❖❖❖


## கொங்கு தமிழ் மணமாலை

(சேவை மையம்) 9442374373, 9944814370

கொங்கு வேளாளக் கவுண்டர் இனத்தில் உயர்கல்வி பயின்று உள்நாட்டில், வெளிநாட்டில் பணியில் உள்ளோர், சுய தொழில் செய்வோர், தொழிலதிபர் வீட்டு வரன்களுக்கு


**K.P.செந்தில்வேல்** M.A., M.Phil.,
ஜோதிடவியல்
575, திருநீலகண்டர் பெயிண்ட் கடை, முதல் மாடி, ரூம் எண்.10
ஐ.சி.ஐ.சி.ஐ அருகில், பல்லடம் ரோடு, திருப்பூர் – 641604
E-mail : kongutamilmanamalai@gmail.com


❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

**மருந்தா ? விருந்தா ?**

பத்மஸ்ரீ கொங்குமாமணி வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்



தற்பொழுது முதியவர்கள் உணவுக்கு அடுத்தபடியாக அதிகமாக எடுத்துக்கொள்வது பலவிதமான மருந்துகளைத்தான். சில சமயங்களில் உணவைவிட மருந்துகளின் அளவு அதிகமாகக் கூட இருக்கும். இது எதனால்? மருந்துகளின் அளவைக் குறைப்பது எப்படி? முதுமையை நோய்களின் மேய்ச்சல் காடு என்பார்கள். அது ஓரளவுக்கு உண்மையே.

குடும்ப டாக்டர் முறை அறவே ஒழிந்து விட்டது. இப்பொழுதெல்லாம் தங்களுடைய தொல்லைகளுக்கு ஏற்ப டாக்டர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். உதாரணம் : தலைவலி என்றால் நரம்புச் சிகிச்சை நிபுணர், வயிற்று உபாதைக்கு வயிறு, குடல் சார்ந்த டாக்டர், உடல் வலிக்கு எலும்பு சிகிச்சை நிபுணர் ஆகியோர்கள். அவை அனைத்தும் தேவையற்றவை. உடலில் எவ்விதத் தொல்லைகள் வந்தாலும் முதலில் அணுக வேண்டியது குடும்ப டாக்டர் அல்லது நோயாளியைச் சில காலம் தெரிந்த டாக்டர். சிறு சிறு தொல்லைகளுக்கு அவரே சிகிச்சை அளித்து விடுவார். தேவைப்பட்டால் மட்டும் அவரே தேவையான சிறப்பு மருத்துவரிடம் அனுப்பி வைப்பார்.

அடிக்கடி சிறப்பு மருத்துவரைப் பார்ப்பதால் சில நன்மைகளுக்கிடையே பலவிதத் தொல்லைகளும் ஏற்படலாம். சிறப்பு மருத்துவர் அத்துறைக்கான தொல்லைகளுக்கு மட்டுமே (உதாரணம் : மாரடைப்பு, பக்கவாதம்) மருந்து எழுதுவார். அவரால் தன்னிடம் வரும் முதியவர் வேறு என்னென்ன தொல்லைகளுக்கு என்னென்ன மருந்துகள் எடுத்துக்கொள்கிறார் என்பதைக் கேட்கவோ, பார்க்கவோ நேரம் இல்லாமல் இருப்பார். பல வித டாக்டர்கள் பலவித மருந்துகள் என்று தற்பொழுது நிலைமை ஆகிவிட்டது.

என்னிடம் வரும் முதியவர்கள் குறைந்தது 3,4 கோப்புகளுடன் வருகிறார்கள். அதை முழுமையாகப் பார்த்த போது அவர்கள் பலவித மருந்துகள் எடுத்துக்கொள்வது தெரிய வருகிறது. இதனால் முதியவர்களுக்கு கீழ்காணும் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டாகிறது.

**1. மருத்துகளின் சுமை** : பல மருந்துகள் எடுத்துக்கொள்வதால் அதனால் பக்க விளைவுகள் வர வாய்ப்பு அதிகமாகிறது. இவற்றால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படலாம்.

**2. நிதிச்சுமை** : பல மருந்துகளை வாங்கும்போது அதனுடைய விலையும் அதிகமாகி நிதிச்சுமை ஏற்படுகிறது. பல முதியர்களினால் மாத்திரைகளை, அவர்களின் நிதி நிலையின் காரணமாக வாங்க முடியாத நிலையில் உள்ளார்கள். நிதி வசதி காரணமாகப் பலரால் தொடர் சிகிசிச்சையும் செய்து கொள்ள முடிவதில்லை

**3, மனச்சுமை** : முதுமையில் சற்று மறதியும் இருக்கும். அவர்களால் எல்லாவித

மாத்திரைகளையும் நினைவில் வைத்துக்கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் எடுத்து கொள்வது மிகவும் சிரமம். உதாரணம்: காலை, மாலை உணவிற்கு முன்பு, உணவிற்குப் பின்பு, பாதி மாத்திரை அல்லது முழு மாத்திரை.

ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மாத்திரை என்ற கட்டாயம் எதுவும் இல்லை. ஒரு சில நோய்களை மருந்து இல்லாமலேயே குணமாக்க முடியும். உதாரணம் : சத்துணவுக் குறைவால் அவதிப்படுகிறவர்களுக்கு நல்ல சத்தான உணவைக் கொடுக்கலாம். முழுங்கால் மூட்டுவலியால் பாதிக்கப்படுகிறவர்கள் எடையைக் குறைத்து, மூட்டுகளுக்கான சிறப்புப் பயிற்சி செய்தால் வலி குறையும், நீரிழிவு நோய் உணவுக் கட்டுப்பாட்டின் மூலமும் உடற்பயிற்சியின் மூலமும் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

**பல வித மருந்துகளை தவிர்ப்பது எப்படி ?**

முதியோர் மருத்துவரால் ஓரளவுக்கு உதவ முடியும். முதலில் முதியவரை முழுமையாக பரிசோதனை செய்து அவருக்குண்டான தொல்லைகளை ஒரு பட்டியல் இட்டுக் கொள்வார். முதலில் உடனடியாக சிகிச்சையளிக்க வேண்டிய நோய்களுக்கு (உதாரணம் : மாரடைப்பு, அதிக காய்ச்சல், மூச்சு விடுவதில் சிரமம், மனக் குழப்பம்) சிகிச்சையளிப்பதில் முன்னுரிமை கொடுப்பார். நாள்பட்ட தொல்லைகளான மலச்சிக்கல், உடலில் வலி, நரம்புத் தளர்ச்சி, முன்பு ஏற்பட்ட எலும்பு முறிவு மற்றும் முன்பு செய்து கொண்ட அறுவை கிசிச்சை போன்ற தொல்லைகளுக்கு அடுத்ததாக சிகிச்சையளிப்பார். இதனால் ஒரே சமயத்தில் பலவித மருந்துகளை எடுத்துக்கொள்வதை வெகுவாகக் குறைக்க முடியும்.

**டாக்டரின் பங்கு :**

மருந்து எழுதுவதற்கு முன்பு நோயாளி தற்பொழுது எடுத்துக்கொள்ளும் மருந்தின் விவரத்தை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு ஏற்றவாறு மருந்தின் அளவை கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். சிறப்பு மருத்துவர் மிகவும் அவசியம் என்றால்மட்டுமே மாத்திரையை எழுத வேண்டும். எப்பொழுதும் எடுத்துக்கொள்ளும் மருந்தை குடும்ப டாக்டர் கவனித்துக்கொள்வார். மருத்துவரின் ஆலோசனை இன்றி மருந்தைக் கூட்டவோ குறைக்கவோ அல்லது நிறுத்தவோ கூடாது என்று நோயாளியை எச்சரிக்க வேண்டும்.

**முதியவர்களின் பங்கு :**

புதியதாக ஒரு மருந்தை எடுத்துக்கொள்ளும் போது தொல்லை சற்று அதிகமானால் உடனடியாக டாக்டரை அணுக வேண்டும். டாக்டர் மருந்து எழுதுவதற்கு முன்பாகவே அலர்ஜி ஏதாவது உண்டா என்று நோயாளி டாக்டரிடம் தெரிவிக்க வேண்டும். அடிக்கடி டாக்டரை மாற்றிக்கொள்ள வேண்டாம். இதனால் பல வித மருந்துகளை எடுத்துக்கொள்ள நேரிடும். மருந்துக் கடையில் சென்று மருந்து வாங்கும் சுய சிகிச்சை முறையையும் தவிரிக்கவும்.

‘‘ஒரு நோயைச் சரியாகக் கண்டறிந்துவிட்டால் அதற்குப் பலவித மருந்துகளை விட அதற்குண்டான ஒரே மருந்தே மிகவும் நல்ல பயனை தரும்.’’

தொடரும்..........

❖❖❖❖❖

# சந்தனம் அறிந்ததும் அறியாததும்

........ சென்ற இதழ் தொடர்ச்சி

– கே.கே.சோமசுந்தரம் IFS (Retd)



அரசு சந்தன டிப்போக்களில் மரங்கள் செதுக்கப்பட்டு, பட்டை தனியாகவும், வெள்ளைப்பகுதிகள் தனியாகவும் பிரிக்கப்பட்டு, எஞ்சியுள்ள வைரப்பகுதி ஒரு மீட்டர் அளவுள்ள கட்டைகளாக வெட்டுப்பட்டு தரம் வாரியாக 18 ரகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் உண்டு. (உருது) விலையும். மாறுபடும். உதாரணமாக கோட்லா ரகம் டன் ரூ. அறுபது லட்சத்திற்குக் மேலும் காட்பட்லா வேர் ரகங்கள் சுமார் ரூ. ஐம்பது இலட்சத்திற்கு குறையாமலும், அயன்பகார் செரியா, அயின்சில்டர், ஆகியவை ரூ. நாற்பத்தைந்து லட்சம் வரையும் விலை போகிறது. ஜஜ்போகல் ரகங்கள் ரூ. நாற்பத்து ஐந்துலட்சம் முதல் ரூ. எழுபது லட்சம் வரை விலை போகிறது. இந்த ரகம் கடைவதற்கும், கோவில்களுக்கும் ஏற்றது.

பழனி, திருப்பதி, திருச்செந்தூர், திருத்தணி ஆகிய கோவில்களுக்கு ஜஜ்போக்கல் ரகத்தைத் தான் அதிக அளவில் வாங்குகின்றனர். அறுப்புத்தூள் கூட ஒரு டன் 10 முதல் 12 லட்சத்திற்கு விற்கப்படுகிறது.

சந்தன மரங்கள் பலவாறு உபயோகப்படுத்தப்படுகின்றன. பாதிக்கு மேல் எண்ணை எடுக்கப்பட்டு வாசனைத் திரவியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. கோவில்களில் பூஜைக்கும், ஊதுபத்தி தொழிலிலும், மருந்துப்பொருளாகவும், சிற்பங்கள் செதுக்கவும், இன்னும் பல வகைகளிலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

நாற்றங்கால்களில் ஒரு அடி உயரம் வளர்த்து செடி உண்டாக்குவது மிகவும் கடினமான செயல். வைரஸ் பாக்டீரியா இன்றும் பலவகை பூஞ்சான்கள் தாக்குகின்றன. 100 செடிகள் வளர்க்கும் போது 20% – 30% தான் தேறும். திடீர் இறப்புகள் சர்வ சாதாரணம். ஆகவேதான் நாற்றங்கால்களில் இதற்கு அதிக விலை வைக்கப்படுகிறது.

ஆனால் பூமியில் நட்டபிறகு நன்கு செழித்து வளரும். செடிகளின் உயரம், தரத்தைப் பொறுத்து ஒரு செடி ரூ. 20 முதல் ரூ. 100 வரை விற்கப்படுகிறது. விவரம் தெரியாத சில நர்சரிக்காரர்கள் 10க்கும் மேற்பட்ட சந்தன வகைகள் உள்ளன என்று கூறி அவற்றிற்கு தனித்தனி விலை வைத்து விற்று வருகின்றனர். விவசாயிகள் ஏமாறாமல் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒரே ஒரு வகை தான் உள்ளது. அதுதான் Santalum Album. சந்தனத்தில் ஒட்டு செடியும் கிடையாது. ஜஜ்போக்கல் கட்பட்லா அயன்பகார் ஆகிய பெயர்கள் வெட்டப்பட்டு டிப்போக்களில்விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் துண்டுகளின் பெயர்கள் தான். சில நாற்றாங்கால்களில் ஜஜ்போகல் செடிவகைகள் உள்ளதாக அதிகவிலை வைக்கின்றனர். அவ்வாறு பிரித்து வளர்க்க முடியாது. நாற்று, வாங்கும்போது பொதுமக்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும்.

கோவை வனக்கல்லூரி, GASS அருங்காட்சியத்தில் ஒரு ஒரு பெரிய சந்தன மரம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் எடை 1.75 டன்னாகும். இதன் உயரம் 34 அடி சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரூர் வனங்களிலிருந்து வெட்டப்பட்டஇந்த மரத்தின் தற்போதைய மதிப்பு ரூ. 1 கோடியே 10 இலட்சமாகும்.

உலகத்திலேயே மிகப்பெரிய சந்தன மரம் ஒசூரிலுள்ள கால்நடைப் பண்ணையில் இருந்தது. இதன் சுற்று 245 செ.மீ. எடை சுமார் 2.27 டன். வயது. 100 முதல் 130 ஆண்டுகள் எனக்கணக்கிடப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக 2001ம் வருடம் திருடர்களால் வெட்டப்பட்டு பெரும் பகுதி எடுத்துச்செல்லப்பட்டு விட்டது. இந்த மரத்தைப் பற்றிய விளம்பரமே இதற்கு எதிரியாக அமைந்தது.

**தனியார் தோட்டங்களில் சந்தனம் வளர்க்க முக்கிய குறிப்புகள் :–**

சந்தனத்தைத் தனியார் வளர்க்கலாமா ? என்ற சந்தேகம் இன்னும் பலபேரிடம் உள்ளது. சந்தன வளத்தை அதிகரிக்க தனியார்களும் ஈடுபட்டால்தான் சாத்தியமாகும் என்ற எண்ணத்தில் தமிழ்நாடு அரசால் 2002 ஆம் ஆண்டு சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. அரசு ஆணை 140 சுற்றுச்சூழல் வனம் தேதி 27/11/2008 படி தனியார் தோட்டங்களில் தானாக வளர்ந்த மரங்களையோ அல்லது விவசாயிகளால் வளர்க்கப்பட்ட மரங்களையோ வெட்ட விரும்பினால் வனத்துறை அலுவலர்கள்

பார்வையிட்டு பின்னர் வெட்ட ஏற்பாடு செய்து விடுவார்கள். 3 மாதத்திற்குள் மரத்தின் மதிப்பில் 20% தொகையைக் கொடுத்து விடுவார்கள். 60 சதவிகிதம் தொகை மரங்கள் விற்கப்பட்ட பின்னர் பட்டுவாடா செய்யப்படும். எஞ்சியுள்ள 20 சதவிகிதம் தொகை நிர்வாகச் செலவுகளுக்காகவும், வெட்டுதல் வகை பிரித்தல் செலவுகளுக்காகவும் எடுத்துக்கொள்ளப்படும். எக்காரணம் கொண்டும் விவசாயிகள் தனியாருக்கு விற்க முடியாது.


சந்தன மரம் எல்லா மண்ணிலும் வளரும். தண்ணீர் நாள்பட தேங்கி நிற்கக் கூடாது. பொதுவாக சந்தனத்திற்கு அதிகத் தண்ணீர் தேவையில்லை. நீர் பாய்ச்சினாலோ (அல்லது) சொட்டு நீர் தேங்காத சரிவு நிலப்பகுதி மிகவும் ஏற்றது. சந்தன மரம் ஒரு வேர் ஒட்டுண்ணி, ஆகவே அத்துடன் வளர ஒரு துணைமரம் அவசியம் தேவைப்படும். ஏக்கருக்கு 10 10 தூரத்தில் 400 மரங்கள் நடலாம். துணைமரம் ஈட்டி, சவுக்கு ஆகிய மரங்களாக இருந்தால் அவை மூலமும் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

பொதுவாக சந்தனம் ரசயான உரங்களை ஏற்றுக்கொள்வதில்லை. இயற்கை உரங்களே உகந்தது. வளரும் இளம் மரங்களில் பக்க கிளைகளை 1.1.2. மீட்டர் உயரத்திற்கு எடுத்துவிட்டால் ஐஜ்போகல் அயன்பகார் ஆகிய மரத்துண்டுகள் கிடைக்கும். நல்ல விலையும் கிடைக்கும். சந்தன மரங்கள் நட அரசு அனுமதி தேவையில்லை. 2002 ம் ஆண்டே அனைவருக்கும் பொதுவான அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. நட்டவுடன் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கலில் பெயர், சர்வே எண் ஆகிய விபரங்கள் பதிந்தால் போதுமானது.

சந்தன மரங்கள் திருட்டு போய்விடும் என்ற பயத்தில் அனேக விவசாயிகள் நடபயப்படுகிறார்கள். புறம்போக்குகளில், கேட்பாரில்லாத நிலங்களில் தனியாக நிற்கும் மரங்கள் வெட்டப்படலாம். ஆயிரக்கணக்கில் மரங்கள் நிற்கும்போதும் திருட்டு வெட்டு அதிக சாத்தியமில்லை எவ்வளவு குறைவாக வைத்துக்கொண்டாலும் 15 ஆண்டிற்கு மேல் ஏக்கருக்கு 2 கோடி வரை உறுதியாக உண்டு. ஆகவே விவசாயிகள் சந்தன மரங்களை நட முன் வரவேண்டும்.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. கா. நல்லதம்பி

நாமக்கல் நகரில் 1964 ஆம் ஆண்டு திரு. எம்.காளியப்பன் – திருமதி பாப்பு தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். பி.எஸ்சி. டி.பி.ஏ. பட்டங்கள் பெற்றுள்ள இவர் K.L.S.Transports என்ற நிறுவனத்தைத் தொடங்கி, போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

நாமக்கல் கொங்கு வேளாளர் சங்கத்தின் அடிப்படை உறுப்பினராக இருந்து தற்போது வரை அச்சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றி வருகிறார். நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கம் துவங்கிய நாள்முதல் உறுப்பினராகப் பணியாற்றியதுடன் உதவி செயலாளர் மற்றும் செயலாளர் பொறுப்பினை ஏற்று சிறப்பாகப் பணியாற்றினார். கடந்த 9 வருடங்களாக சங்கத்தின் தலைவர் பொறுப்பேற்று மிகச்சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றார். கொங்குச் சமுதாய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சங்கத்தின் மூலம் பல சேவைகளைச் செய்து வருகிறார்.

கொங்கு இன மக்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெற்றிட நடைபெற்ற சுய உரிமைப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்துகொண்டார்.

1985 ஆம் ஆண்டுமுதல் நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச்செயலாளராகவும், பின்னர் தொடர்ந்து மூன்றுமுறை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது அச்சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் சிறப்பாகவும், பலரும் பாராட்டும் வண்ணமும் பணியாற்றி வருகிறார்.

லாரி தொழில் சிறப்பாக நடைபெறுவதற்கும், லாரி உரிமையாளர்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் நலன்களுக்காகவும் அயராது பாடுபட்டு சேவையாற்றி வருகிறார்.

மேலும் தென் மாநில லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்று மாநில மற்றும் அகில இந்திய அளவில் மத்திய, மாநில அரசுகளுடன் நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டு லாரி தொழிலின் மேம்பாட்டிற்காக சேவை செய்து வருகிறார்.லாரி தொழிலின் மேம்பாட்டிற்காக பல போராட்டங்கள் நடத்தியும் பேச்சு வார்த்தை நடத்தியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர்.

நாமக்கல் ரோட்டரி சங்கத்தில் இணைந்து 17 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். பல்வேறு மாவட்ட கமிட்டிகளின் தலைவர், உதவி கவர்னர், பொருளாளர், செயலாளர், தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்து பொதுமக்களுக்காக இரத்ததானம், கல்வி உதவி, இலவச மருத்துவமுகாம் போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகிறார். நாமக்கல் மாவட்ட பாரத் சாரணர் சங்கத்தின் மாவட்ட உதவி ஆணையராகப் பொறுப்பு வகித்து பொதுமக்களின் பாதுகாப்பிற்கான செயல்களிலும் ஈடுபட்டு சேவை செய்து வந்துள்ளார்.

மனித நேயம் மிக்க பண்பாளராக விளங்கும் இவரது சிறப்பான சேவையைப் பாராட்டி ரோட்டரி சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் விருதுகளை வழங்கி கௌரவித்தது. All India Motor Transport Congress ன் 75 ஆம் ஆண்டு பவள விழா நிகழ்வின் போது அதன் தலைவர் திரு. ஜி.ஆர்.சண்முகப்பா அவர்களால் இவருக்கு ‘டிரான்ஸ்போர்ட் சாம்ராட்’ என்ற உயரிய விருது வழங்கப்பட்டது.

இவரது வாழ்நாளில் இதுவரை 75 முறை இரத்ததானம் வழங்கி பல்லுயிர் காக்கும் சேவையைச் செய்துள்ளார். இளைஞர் இயக்கமான ஜேசீஸ் இயக்கத்தில் 10 ஆண்டுகளுக்குமேல் உறுப்பினராக இருந்து சேவைகள் செய்துள்ளார்.

இவரது வெற்றிக்குப் பின்னால் உள்ளவர் இவரது மனைவி திருமதி என்.மல்லிகா. இத்தம்பதியருக்கு என். சிந்துஜா MCA, என். அனுஜா, B.E., ஆகிய இருமகள்கள் உள்ளனர்.

சிறந்த தொழிலதிபர், நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கத்தலைவர், தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளனத் தலைவர், நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தலைவர் முதலான பொறுப்புகளையேற்று மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு சமுதாயசேவை, சமூக சேவை ஆகியவற்றிலும் சிறந்து விளங்கும் திரு.கா.நல்லதம்பி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று நடந்த பொன்விழாவில் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. எம்.மணி

ஈரோடு மாவட்டம் சிவகிரி கிராமத்தைச் சேர்ந்த திரு.முத்துசாமி கவுண்டர் – திருமதி ராமாயி அம்மாள் தம்பதியரின் மகனாக 1951 ஆம் ஆண்டு பிறந்தார். சிவகிரி அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். விவசாயத்திலும், தொழிலிலும் மிகவும் நாட்டம் கொண்டவராக விளங்கியதால், மேலே படிக்க விருப்பமில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்டார்.

விவசாயத்தில் நவீன கருவிகளைப் பயன்படுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வலசுமணி லேத் வர்க்ஸ் என்ற நிறுவனத்தை 1986 ஆம் ஆண்டு தொடங்கினார். விவசாயத்திற்குத் தேவையான ADVs, விதைக்கும் கருவிகள், சாண எரிவாயு உருளைகள் போன்றவற்றைத் தயாரித்தார். இந்தக் கருவிகள் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. 1992 ஆம் ஆண்டு முதல் Tractor Tipping Trailors, Gauge Wheels, Cultivators, Levelers முதலான எந்திரங்களையும் கருவிகளையும் தயாரித்தார். இந்த இயந்திரங்களும், கருவிகளும் தமிழகமெங்கிலும் நல்ல வரவேற்பைப் பெற்றன. இந்த நிறுவனம் விவசாயம் சம்பந்தமான கருவிகளைத் தயாரிக்கும் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக விளங்க ஆரம்பித்தது.

கொங்கு நாட்டில் மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தேவைக்காக 1995 ஆம் ஆண்டு மஞ்சளை வேகவைக்கும் கொதிகலன்கள், மஞ்சள் பாலிஷர்ஸ் ஆகியவற்றையும் தயாரித்தது இந்நிறுவனம். 2000 ஆம் ஆண்டிலிருந்து நவீன முறைகளையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி கதிரடிக்கும் இயந்திரங்கள் தயாரிப்பு சம்பந்தமான ஆராய்ச்சியில் இந்த நிறுவனம் ஈடுபட்டது. 2002 ஆம் ஆண்டு நவீன நெல் கதிரடிக்கும் இயந்திரத்தை உருவாக்கியது இந்த நிறுவனம். நெல் தவிர மற்ற தானியங்களையும் கதிரடிக்கும் வகையில் பின்னர் கதிரடிக்கும் இயந்திரத்தில் தேவையான மாற்றங்கள்

செய்யப்பட்டன.2004 ஆம் ஆண்டு பலவகை தானியங்களையும் கதிரடிக்கும் நவீன இயந்திரம் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்பட்டன. இந்த நவீன கதிரடிக்கும் இயந்திரத்திற்கு (Multicrop Thresher) காப்புரிமை வாங்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு மே மாதம் வலசுமணி ஃபார்ம் மெசின்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை திரு. மணி தொடங்கினார். பலவிதமான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு பல தானிய கதிரடிப்பு இயந்திரத்தை அற்புதமாக வடிவமைத்து உருவாக்கி சாதனை படைத்த திரு. எம்.மணி அவர்களுக்கு L Ramp Award of Excellence என்ற விருதை முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் 28–11–2007 அன்று சென்னை IIT யில் நடைபெற்ற விழாவில் வழங்கிப் பாராட்டினார்.

7–12–2006 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் Intellectual Peoples and Economic Growth Association என்ற அமைப்பு திரு.எம்.மணி அவர்களுக்கு Great Achiever of Industrial Excellence Award-2005 என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

இவருடைய மனைவி திருமதி உமாமணி இவருடைய வெற்றிகளுக்குத் துணை நின்றவர். எம்.புவனேஷ், எம்.செல்வகுமார் என்ற இரண்டு புதல்வர்கள் உள்ளனர். திரு.எம்.புவனேஷ் பி.இ.படித்துள்ளார். மனைவி பெயர் திருமதி பிரதிபா. திரு. எம்.செல்வகுமார் பி.டெக் பட்டம் பெற்றுள்ளார். இவருடைய மனைவி பெயர் திருமதி சத்யா. புதல்வர்கள் இருவரும் தந்தைக்கு உதவியாக உள்ளதோடு, தொழிலை மேலும் முன்னேற்றச் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

நமது நாட்டில் விவசாயத் தொழில் மிகவும் நலிந்துள்ளது. பல பிரச்சினைகளுள் விவசாய வேலைக்கு ஆள் கிடைக்காத ஒன்றும் முக்கியமானது. இத்தகைய சூழ்நிலையில் விவசாயத்தில் இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவது அவசியமாகும். விவசாயிகள் பயன்பெற நவீன விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்கி சாதனைகள் படைத்துள்ளார், திரு.மணி அவர்கள்.

தொழில் துறையில் ஈடுபட்டு, விவசாயிகள் நலனுக்காக அவர்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தயாரித்து நாட்டு நலனுக்காகப் பாடுபட்டுவரும் திரு.எம்.மணி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று நடைபெற்ற பொன்விழாவில் 'கொங்கு சாதனையாளர்' விருதை வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## கொங்குநாடு கே.முத்துசாமி

கரூர் மாவட்டம் மொஞ்சனூர் கிராமம் பசுபதிபாளையத்தில் மொஞ்சனூர் கொங்கு தேர்வேந்தர் குலத்தில் திரு.குமாரசாமி கவுண்டர் – திருமதி மரகதம்மாள் தம்பதியருக்கு 27–09–1995 அன்று மகனாகப் பிறந்தார். தற்போது தென்னிலை கிராமம் கூனம்பட்டி அருகில் உள்ள கவுண்டர் தோட்டம் என்று அழைக்கப்படும் அவரது பண்ணை இல்லத்தில் வசித்து வருகிறார், கொங்குநாடு கே.முத்துசாமி.

பத்தாவது வயதிலேயே தந்தையை இழந்த இவர், தாயார் மற்றும் தாய்வழி பாட்டனார் அரவணைப்பில் வளர்ந்தார்.1972 ஆம்ஆண்டு SSLC தேறியதோடு, அவரது படிப்பு முடிவுக்கு வந்தது.

சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்ற இவர் 1977 ஆம் ஆண்டு முதல் விவசாய சங்கப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். திரு. சி.முத்துசாமி கவுண்டர், திரு. இரா.கிருஷ்ணசாமி கவுண்டர் ஆகிய நம்மினத் தலைவர்கள் பொறுப்பேற்று நடத்திய தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். இந்தச் சங்கம் விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும், உரிமைக்காகவும் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டார். தற்போது இந்தச் சங்கத்தின் கரூர் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டு வருகிறார்.

1985 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையில் உள்ளார். 1990 ஆம்ஆண்டு பேரவைத்தலைவர் கோவை செழியன் இவரை க.பரமத்தி ஒன்றிய கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவராக நியமித்தார். பின்னர் 1994 ஆம் ஆண்டு கரூரில் நடைபெற்ற கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் மூன்றாவது மாநில மாநாட்டின் பிரசாரக் குழுவில் இடம் பெற்றுப் பணியாற்றினார். அதற்குப்பிறகு பேரவையின் கரூர் மாவட்டத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்று கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இந்தக்

காலக்கட்டத்தில் திருச்சி ஆர்.தேவராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து மாநில மாநாடுகளிலும் பல முக்கிய பொறுப்புகள் ஏற்று மிகச்சிறப்பாக மாநாடுகளின் வெற்றிக்குப் பாடுபட்டார்.

கரூரில் 19–12–2010 அன்று நடைபெற்ற விவசாயிகளின் அரசியல் உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டுக் குழுவின் செயலாளராகவும், 12–10–2008 அன்று நடைபெற்ற கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வெள்ளிவிழா மலர்க் குழுவின் உறுப்பினராகவும், மொஞ்சனூர் கரிய காளியம்மன் முத்துசாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா மலர்க்குழுவின் செயலாளராகவும் பொறுப்பேற்று பலரும் பாராட்டும் வண்ணம் செயல்பட்டார்.

கரூர் மாவட்ட உபயோகிப்பாளர் சங்கத்தின் தலைவராக 1995 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். கரூர் மாவட்டத்தில் தென்னிலை தொலைபேசி இணைப்பகத்தை STD வசதியுள்ள தொலைபேசி இணைப்பகமாக மாற்றியதில் இவருடைய முயற்சியே முக்கியக் காரணமாக இருந்தது. தென்னிலை பகுதியில் 150 விவசாயிகள் கொண்ட மேய்ச்சல் ஆடு வளர்ப்போர் சங்கத்தின் தலைவராக உள்ளார். இந்த விவசாயிகளுக்கு தேசிய ஆடு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக உயர்ரக மேய்ச்சல் இன பொழிகிடா இலவசமாக கிடைக்க ஏற்பாடு செய்தார்.

மொஞ்சனூர் கிராம துல்லிய பண்ணை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர்பாசனம் அமைக்க ஏற்பாடு செய்தார். இதனால் கடும் வறட்சியிலும் விவசாயிகள் காய்கறிகளைப் பயிரிட்டு வருகின்றனர்.

கொங்குச் சமுதாயப்பற்று மிகுந்த இவர் கோவை செழியன் அவர்களின் பேரன்பைப் பெற்றவர். கொங்குச் சமுதாய மக்கள் மேம்பாட்டிற்காகவும். விவசாயிகள் நலன்களுக்காகவும் சங்கம், பேரவை, கழகம் என பல கொங்கு அமைப்புகளில் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார். போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றுள்ளார்.

இவருக்கு மோகனச் செல்வி என்ற மனைவியும், சிவசபரி என்ற மகனும் உள்ளனர் மகன் பி.இ.முடித்துள்ளார்.

கொங்கு வேளாளர் சமுதாயப்பணியிலும், கஷ்டப்பட்டாலும் நஷ்டப்பட்டாலும் விவசாயமே கதியென்று அல்லல்படும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான பணியிலும் கடந்த 20 ஆண்டுகளாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள கொங்குநாடு கே. முத்துசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று நடந்த பொன்விழாவில் ‘கொங்கு சாதனையாளர்’ விருது அளித்துப் பாராட்டியது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. டி.சங்கர்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகில் நல்லாகவுண்டம்பாளையம் திரு. தேவராஜன் – திருமதி தெய்வானை தம்பதியருக்கு 1973 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு.டி.சங்கர்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்தார். விவசாயக் குடும்பத்தில் பிறந்து பருத்திக் காட்டில் வேலை செய்து இவரைப் படிக்க வைத்த தந்தையார், 'நீ படிக்க லாயக்கு இல்லை' என்று கூறி திருச்செங்கோடு அருகில் உள்ள நல்லாம்பாளையம் என்ற ஊரில் இருந்த இவருடைய தாத்தா வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அங்கு ஒரு வருடம் தறி வேலை பார்த்தார். அடுத்த வருடம் சங்கர் நல்லசமுத்திரம் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் சேர்ந்த முதல்நாளே ஆங்கில ஆசிரியர் இவரைப் புத்தகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார். சங்கர் தட்டுத்தடுமாறிப் படித்து முடித்ததும். அவர் நன்றாகப் படித்ததாகக் கூறி ஆசிரியர் ஒரு சாக்லேட் பரிசு அளித்தார். சங்கர் முதன்முதலாக பாராட்டின் சுவையை ருசித்தார். அதன்விளைவு பத்தாம் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

பனிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் திரைப்படத்துறையில் இயக்குநராக ஆக வேண்டும் என்ற கனவுடன் முயற்சிகள் செய்தார். கோவை விவசாயக்கல்லூரியில் பி.எஸ்சி. (அக்ரி) பட்டப்படிப்பை முடித்தார். படிப்பை முடித்தவுடன் மீண்டும் சினிமா கனவு. ஒன்றரை வருடகாலம் கனவுடன் சென்னையில் சுற்றிக்கொண்டிருந்தார். அப்போது இவரைச் சந்தித்த உறவினர் ஒருவர், ''ஞானசேகரன் என்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி

இருக்கிறார். பணியில் இருந்தவாறே மோக முள் என்ற படைத்த இயக்கியுள்ளார். நீயும் படித்து நல்ல நிலைக்கு வந்த பிறகு சினிமா உலகுக்குச் செல்'' என்று அறிவுரை கூறினார். இந்த வார்த்தைகள் திரு.சங்கரை நன்கு யோசிக்க வைத்தன.

எம்.எஸ்சி.(அக்ரி) படிக்க நுழைவுத் தேர்வு எழுதினார். உதவித்தொகையுடன் ஹரியானாவில் NTRI என்ற கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதை முடித்ததும் அப்படியே சிவில் சர்வீஸ் தேர்வு எழுதலாம் என்று முடிவு செய்து டெல்லிக்குக் கிளம்பினார். அவரை ஐ.ஏ.எஸ். படிக்க உதவியவர் அவரது கல்லூரித்தோழி, வைஷ்ணவி. அவர் டெல்லிக்கு வந்து வேலைபார்த்துக்கொண்டே திரு.சங்கரை ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் படிக்கப் பொருளுதவி செய்தார். நான்கு முறை தேர்வு எழுதினார். வெற்றி கிட்டவில்லை.

சிவில் சர்வீஸ் தேர்வில் கிடைத்த அனுபவத்தை வைத்து, அண்ணா நகரில் 36 மாணவர்களுடன் 'சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி' தொடங்கினார். கடுமையாக உழைத்தார். பயிற்சி மாணவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து தக்க பயிற்சியளித்தார். அதன் விளைவு தற்போது வருடம் ஒன்றுக்கு 300க்கும் அதிகமானவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார். கடந்த வருடம் தமிழகத்திலிருந்து சிவில் சர்விஸ் தேர்வுகளில் வெற்றிபெற்ற 96 பேர்களில் 36 பேர் இவரது சங்கர் ஐ.ஏ.எஸ்–அகாடமியில் பயிற்சி பெற்றவர்களாவர்.

2000 ஆம் ஆண்டு வைஷ்ணவியை மணம் புரிந்து கொண்டார். திரு.டி.சங்கர் – திருமதி வைஷ்ணவி தம்பதியருக்கு சஹானா, சாதானா ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

இவர் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்றிருந்தால், அவர்மட்டும்தான் ஐ.ஏ.எஸ்– பணியில் சேர்ந்திருப்பார். அவர் தோற்றதினால் இன்று பல ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் களை உருவாக்கிக்கொண்டு வருகிறார்.

தமிழகத்திலிருந்து நிறைய பேர் இந்தியக் குடிமைப்பணிகளுக்கான ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்.தேர்வுகளில் வெற்றி பெற்றிட வேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்பட்டு சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி மூலம் சாதனைகள் புரிந்துள்ள திரு. டி.சங்கர் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று நடந்த பொன்விழாவில் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖❖

## மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : பி.கோகுலகிருஷ்ணன்

பிறந்த தேதி : 22–09–1981 செவ்வாய்

பிறந்த நேரம், இடம் : 14.19 IST, ஈரோடு

நட்சத்திரம் : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம்

தந்தை பெயர் : கே.என்.பாலசுப்பிரமணியன்

தாயார் பெயர் : திலகவதி

தந்தை தொழில் : Textile Export Business

உடன் பிறப்பு : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர்

கல்வி : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK)

தொழில் : Own Textile Export Business, Karur

உயரம் / நிறம் : 5.6 அடி, நல்லசிவப்பு

குலம் / கோவில் : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன்

எதிர்பார்ப்பு : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :

தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736

தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖